செ.வெ.எண்:-51/2020 நாள்:21.04.2020

திண்டுக்கல் மாவட்டம்

# பேரிடர் மேலாண்மை ஆணைக்குழுவின் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை குறித்து ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

---

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை குறித்து மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணைக்குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு முழுவதும் கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திண்டுக்கல் மாவட்டம் முழுவதும், கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை போர்கால அடிப்படையில் நடைபெற்று வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 03.05.2020 வரை ஊரடங்கு உத்தரவு தொடரும் என்பதால் ஏற்கனவே கடைபிடிக்கபட்டு வரும் அனைத்து நடைமுறைகளும் தொடரும்.

திண்டுக்கல் மாவட்டத்தில் 19.04.2020 வரை 74 நபர்களுக்கு கொரோனா வைரஸ் நோய் தொற்று உறுதி செய்யப்பட்டு, கரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை வழங்கப்பட்டு 38 நபர்கள் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 1700 நபர்கள் வீட்டுகண்காணிப்பில் வைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. நோய் தொற்று ஏற்பட்ட நபர்கள் வசித்து வந்த பகுதிகள் கட்டுபாட்டு பகுதியின் (Containment Plan) கீழ் கொண்டுவரப்பட்டு, எந்த ஒரு காரணத்திற்காகவும், கட்டுப்பாட்டு பகுதியில் வசித்துவரும் பொதுமக்கள் தேவையின்றி வீட்டைவிட்டு வெளியே வராத வண்ணம் கண்காணிக்கப்பட்டு, சுகாதாரத்துறை, உள்ளாட்சித்துறை, காவல்துறை, வருவாய்த்துறை ஆகியத்துறைகளின் மூலம் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திண்டுக்கல் மாநகராட்சியில் 85 வாகனங்கள், கொடைக்கானல் நகராட்சியில் 17 வாகனங்கள், பழனி நகராட்சியில் 7 வாகனங்கள், ஒட்டன்சத்திரம் நகராட்சியில் 3 வாகனங்கள் மற்றும் பேரூராட்சிகளில் 49 வாகனங்கள் மூலம் பொதுமக்களுக்கு தேவையான காய்கறிகள் தங்குதடையின்றி கிடைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பலசரக்கு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை பொதுமக்களின் வீடுகளுக்கே நேரடியாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீன், இறைச்சி கடைகள் விடுமுறை நாட்களில் இயங்குவதற்கு மாநகராட்சியில் மூன்று இடங்களிலும் மற்றப்பகுதிகளில் சமூக இடைவெளியுடன் கூட்டம் இல்லாமல் இருக்கும் இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, சுகாதாரமான முறையில் வழங்குவதையும் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் கண்காணிக்கபட்டு வருகிறது.

கட்டுப்பாட்டு பகுதிகளாக அறிவிக்கபட்ட பகுதிகளில் பணிபுரிந்து வரும் அலுவலர்கள் மற்றும் கொரோனா வைரஸ் தொற்று நோய் உறுதி செய்யப்பட்ட நபர்களின் குடும்பத்தினர், உறவினர் மற்றும் அவர்களுடன் தொடர்பில் இருந்த நபர்களுக்கு ரேபிட் கிட் உபகரணத்தின் மூலம் பரிசோதனை செய்யப்படுகிறது. கட்டுப்பாட்டு பகுதி மட்டுமின்றி மாவட்டத்தில் அனைத்து பகுதிகளில் உள்ள பொதுமக்களில் சளி, இருமல் மற்றும் சுவாசக்கோளாறு உள்ளவர்களுக்கு கொரோனா தொற்று உள்ளதா என ஆய்வு செய்யப்படவுள்ளன.

நியாயவிலைக்கடைகள் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிமைப்பொருட்கள் நகர்வு குறித்து கண்காணித்திடவும், பொருட்களின் விலை ஏற்றத்தினை கண்காணித்திடவும், ஆய்வு செய்யவும் குழு அமைக்கப்படவுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, குடும்ப அட்டைதாரர்களுக்கு சிறப்பு நிவாரணமாக தலா ரூ.1000/- வீதம் 6,18,900 (98%)மும், விலையில்லா பொருட்கள் 5,66,966 (91%) குடும்ப அட்டைதாரர்களுக்கும், தொழிலாளர் நலத்துறையின் சார்பில் நியாயவிலைக்கடையின் மூலமாக 3481 ஆட்டோ ஓட்டுநர்கள் (72%)மும், 17,095 கட்டிட தொழிலாளர்களுக்கும் (36%)மும், உள்ளாட்சி அமைப்புகள் மூலம் 2326 சாலையோர வியாபாரிகளுக்கும் (65%)மும், நிவாரணத்தொகை வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ளவர்களுக்கு விரைந்து நிவாரணத்தொகை வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பூசாரிகள் நலவாரியத்தில் உறுப்பினர்களாக உள்ள 978 நபர்களுக்கும், நாட்டுப்புற கலைஞர்கள் நலவாரியத்தில் உறுப்பினர்களாக உள்ள 824 நபர்களுக்கும் மற்றும் ஏனைய அமைப்புச்சாரா நலவாரியங்களில் உறுப்பினர்களாக உள்ள நபர்களின் வங்கி கணக்கில் நிவாரணத்தொகை நேரடியாக செலுத்தப்படவுள்ளன.

கொரோனா வைரஸ் தொற்று நோய் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும் வகையில் அரசுத்துறைகளின் மூலம் ஒலி பெருக்கி, துண்டு பிரசுரம், விழிப்புணர்வு குறும்படம் வாயிலாகவும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. உள்ளாட்சி அமைப்புகள் மூலம் அனைத்து பகுதிகளிலும் கிருமி நாசினி தெளிக்கப்படுகிறது. வட்டாட்சியர் அலுவலகங்களில் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டு தீவிரமாக கண்காணிக்கப்படுகிறது.

பேரிடர் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகள், கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்கு மட்டும் பயன்படுத்திடவும், கூடுதல் நிதி தேவைப்படின் அதுகுறித்த விபரங்களை தயாரித்து வழங்கிடவும் அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கை நோய் திவிரமாக செயல்படுத்திட அனைத்து துறை அலுவலர்களுக்கும் அறிவுரை மற்றும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஆர்.சக்திவேல், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.கந்தசாமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி கவிதா, மாவட்ட ஊராட்சி தலைவர் திரு.எம்.பாஸ்கரன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.நளினி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல்.**

---